2019 ஜூலை 16]

118—

வீட்டுமனைப் பட்டா

***11125—திரு. கே.வி. சேகரன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போளூர் தொகுதியிலுள்ள நரிக்குறவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்தில் உள்ள 62 நரிக்குறவர் குடும்பங்களில் 27 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 35 குடும்பங்களுக்கு, ஹஸ்தம்பாடி கிராம நத்தம் சர்வே எண் 695/34—ன் விஸ்தீரணம் 0.45.0 ஹெக்டேர் பரப்பில் இடம் தெரிவு செய்யப்பட்டு, அதில் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு நரிக்குறவர் இனமக்கள் ஒட்டுமொத்தமாக மறுப்பு தெரிவித்ததன் காரணமாக போளூர் வட்டம், வெண்மணி கிராமம் புல எண் 37A தோப்பு புறம்போக்கு வகைப்பாடு கொண்ட 1.48.5 ஹெக்டேர் பரப்பில் 0.3.5 Ares-ல் ஏற்கெனவே சொந்தமான பட்டா இடத்தில் வீடு கட்டி வசித்துவரும் 9 குடும்பங்களைத் தவிர்த்து, மீதமுள்ள தகுதியான 26 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க போளூர் வட்டாட்சியர்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.*

திரு. கே.வி. சேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் தொகுதியில் அல்லி நகர் பகுதியில் 60—க்கும் மேற்பட்ட நரிக்குறவர் குடும்பங்கள் வசிக்கின்றன. போளூர் ஒன்றியம், ஹஸ்தம்பாடி ஊராட்சி, காந்தி நகரில் 30-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. பெரணமல்லூர் ஒன்றியம், நெடுங்குணம் ஊராட்சியில் பழங்குடியினர் நகரில்*

நரிக்குறவர்கள் மற்றும் பழங்குடியினத்தவர்களும் சேர்ந்து 60 குடும்பங்களுக்குமேல் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக குடிசை வீடுகளில் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு அதே இடத்தில் பட்டா வழங்குவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்வியிலே ஏற்கெனவே கேட்டிருக்கிற நரிக்குறவர் மக்களுக்கு, கிராம நத்தத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கு அவர்கள் மறுப்பு தெரிவித்தார்கள். அதனால் தோப்புப் புறம்போக்கிலே ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அவர்களுக்குப் பட்டா வழங்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு தகுதியுள்ள இடங்களில் ஆய்வு செய்து அவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ண உணவும், உடுக்க உடையும், வசிக்க வீடும் இல்லாமல் அவதிப்படும் நரிக்குறவர்கள் ஆங்காங்கே நடைபெறும் திருவிழாக் காலங்களில் பாசி மணி மற்றும் மணி மாலைகளை விற்பனை செய்து, அதிலிருந்து வரும் வருமானத்தில் குடும்பம் நடத்தி வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் சுதந்திரமாக வாழ, வீட்டுமனைப் பட்டா வழங்கி, வீடுகள் கட்டித் தந்து அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்ற இந்த அரசு முன்வர வேண்டும்.

அதுபோன்று, குடிசைமாற்று வாரியம் சார்பில் ஒதுக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு துறையின் கிரயப் பத்திரம் வழங்கப்படவில்லை. கிரயப் பத்திரம் வழங்கினால்தான் பட்டா மாறுதல் செய்யப்படும் என்று அங்கே இருக்கின்ற அதிகாரிகள்

2019 ஜூலை 16]

வலியுறுத்துகிறார்கள். எனவே, இதனையும் இந்த அரசு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்கு மற்றும் ஏழையெளிய மக்களுக்குத்தான் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், ஒவ்வோர் ஆண்டும் இலக்கு நிர்ணயித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நரிக்குறவர் இன மக்கள்மீது வைத்திருக்கின்ற அக்கறையின் காரணமாக இதனை இந்த அவையிலே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அவர்களுக்கு தேவையின் அடிப்படையில், தகுதியின் அடிப்படையில் பட்டாக்களை வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

வீட்டு வசதி வாரியத்தில், குடிசை மாற்று வாரியத்தில் கிரயப் பத்திரம் வழங்கப்படாமல் இருக்கின்றன என்றும், அதனால் பட்டா மாற்றம் செய்ய முடியவில்லை என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இதுபோன்ற மக்கள் நலன் சார்ந்திருக்கிற திட்டங்களைச் செயல்படுத்தும்போது, பொதுவாக அந்தத் துறையின் சார்பில் enter upon permission *என்று சொல்லக்கூடிய, முன் நுழைவு அனுமதியைப் பெற்று, அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அவ்வாறு நிறைவேற்றப்படுகிற அந்தத் திட்டங்களுக்கு, பின்னாளிலே, அவற்றிற்கு கிரயங்கள் முடிக்கப்படுகின்றன. இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் நேரடியாக ஆய்வு செய்து, குடிசை மாற்று வாரியத்தின் எந்தெந்த திட்டங்களுக்குக் கிரயப் பத்திரங்கள் பெறப்படாமல் இருக்கின்றனவோ, அந்தத் திட்டப் பகுதிகளுக்கு எல்லாம் வருவாய்த் துறையிலிருந்து குடிசை மாற்று வாரியத்திற்கு பெயர் மாற்றம் செய்து, அதற்குப் பிறகு அவர்களுக்குக் கிரயப் பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, அந்த இடத்திலும் பட்டா

மாற்றம் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிரினும் மேலான எங்களுடைய கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். 16–7–2004 அன்று கும்பகோணம் பள்ளியில் ஏற்பட்ட தீ விபத்தில் 94 குழந்தைகள் எரிந்து, 18 குழந்தைகளுக்கு தீக்காயங்கள் ஏற்பட்ட நிகழ்வினால் இந்திய அளவில் மட்டுமல்லாமல், உலக அளவில் துக்கம் அனுசரிக்கப்பட்ட நாள் இந்த நாள். முன்னாள் முதலமைச்சர்கள் தலைவர் கலைஞர், அம்மையார் அவர்கள், இன்றைக்கு இருக்கிற எங்கள் கழகத் தலைவர் அத்தனை பேர்களும் அங்கு வந்து, துக்கத்தை அனுசரித்த அந்த நாளை நான் நினைவுகூர்கின்றேன். அந்த நாளை பாதுகாப்பு நாளாக அனுசரிக்க வேண்டுமென்ற அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் ஆசையை இந்த அரசு நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்பிற்கினிய பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சார்ந்த அம்மாசத்திரம் கிராமத்தில் 1963 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட இனாம் ஒழிப்புச் சட்டம்மூலம் தஞ்சாவூர் சத்திரம் நிருவாகத்தில் பரம்பரையாக வாழ்ந்துவரும் சுமார் 250 குடும்பங்கள், பட்டா வழங்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டு வருகின்றனர். விரல் நுனியில் தன்னுடைய துறையை வைத்திருக்கும் மாண்பிற்கினிய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இதனைக் கவனத்தில்கொண்டு செய்து கொடுப்பார் என்று கருதுகிறேன்.

அதேநேரத்தில், திருநாகேஸ்வரம் பேரூராட்சியில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், கேள்வியைச் சுருக்கமாகக் கேட்டீர்களென்றால், நான் அடுத்த உறுப்பினருக்குப் பேச வாய்ப்புத் தருவேன். இல்லையென்றால், நான் அடுத்த கேள்விக்குப் போக வேண்டியிருக்கும்.

2019 ஜூலை 16]

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் 116 சனாவர் வட்டம், O.S.R. ஆவணம் 1886, புல எண் 397—ல் 5 தலைமுறைகளாகக் குடியிருந்துவரும் சுமார் 20 குடும்பங்களுக்கும், மேற்கண்ட 116 சனாவர் வட்டத்தில் வசித்துவரும் 47 ஆதி திராவிடர்கள் குடும்பங்களுக்கும் பட்டா வழங்குமாறு தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனாம் ஒழிப்பு மற்றும் மைனர் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் அடிப்படையில், அரசாங்கம் நிலவரித் திட்டத்தைச் செயல்படுத்துகிறபோது, அங்கு 10 ஆண்டுகள், 20 ஆண்டுகள் மற்றும் 50 ஆண்டுகளாகக் குடியிருக்கும் மக்களுக்கு அரசே முன்வந்து, ஆய்வு செய்து, தகுதியின் அடிப்படையில், பட்டா வழங்குகிறது. இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழுள்ள சில வழக்குகள் நீதிமன்றத்தில் இன்னும் நிலுவையில் இருக்கின்றன. அந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது, நீதிமன்ற வழக்கில் இருக்கிறதா என்பதையும் பார்த்து, அப்படி இல்லையென்றால், உடனடியாக அந்தப் பகுதி மக்களுக்கு பட்டாக்களை வழங்குவதற்கு, குறிப்பாக இந்த இனாம் ஒழிப்பு, மைனர் இனாம் ஒழிப்பு மற்றும் ஜமீன் ஒழிப்புச் சட்டங்களின் அடிப்படையில், முழுமையாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசிலும் சரி, அல்லது அதற்கு முன்பாக இருந்த தங்களுடைய அரசிலும் சரி, அந்த ஏழையெளிய மக்களுக்கு அதிக அளவில் பட்டாக்கள் முழுமையாக வழங்கப்பட்டிருக்கின்றன. அதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல், பல்வேறு இடங்களில் ஆதி திராவிட மக்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு ஆதி திராவிட நலத் துறையும், வருவாய்த் துறையும் இணைந்து ஆதி திராவிட மக்களுக்கு நில எடுப்பு செய்து, அவர்களுக்குப் பட்டா வழங்கிவருகிறது. அதையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, பரிசீலனை செய்து பட்டா வழங்க

நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தாலுகா அலுவலகம் என்பது மறைந்த முதல்வர் அம்மா அவர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. கடையநல்லூர் தாலுகா அலுவலகம் கடையநல்லூர் நகர எல்லையிலேயே அமைக்கப்பட வேண்டும் என்பதை நான் தொடர்ந்து 3 வருடங்களாக இங்கே வலியுறுத்தி வருவதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். இறைவனுடைய அருளால் ஊருக்குள்ளேயே, பேருந்து நிலையத்திற்கு அருகிலேயே, நடந்து செல்லக்கூடிய அளவில், நல்ல இடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் பரிந்துரை செய்து, அதற்கு முன்பாக திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியின் பொருளாளர், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களும் நேரடியாக அங்கே வருகை தந்து, அது நல்ல இடமாக இருப்பதால், அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையையும் மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் ஆகியோரிடம் சொல்லி, இப்போது சாதகமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு துணை நின்ற அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், இந்தப் பணிகளுக்கு எங்களுக்கு வழிகாட்டியிருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர், தளபதியார் அவர்களுக்கும் என் இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், உடனடியாக அந்தப் பணிகளைத் துவக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைக்கின்றேன். ஏனென்றால், பல்வேறு போராட்டங்கள் அங்கு நடத்தியதன் காரணமாக, பொது மக்கள் அங்கு பணிகள் துவங்கப்படுமா, இல்லையெனில் அங்கு தொடர்ந்து போராட வேண்டுமா என்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். 2 தினங்களுக்கு முன்பாக அனைத்துக் கட்சித் தோழர்களும் என்னை வந்து சந்தித்தபோதுகூட, கண்டிப்பாக அந்த

2019 ஜூலை 16]

இடத்தில் கட்டப்படும் என்று சொல்லியிருக்கின்றேன். எனவே, சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிவதற்கு முன்பாகவே, அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மற்றும் அதிகாரிகளும் உரிய உத்தரவினை பிறப்பிக்குமாறு அன்போடு உங்கள் மூலமாக வலியுறுத்தி, மீண்டும் அனைவருக்கும் தொகுதி மக்களின் சார்பாக இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, கட்சி சார்பில்லாமல், இந்த மாமன்றத்தில், மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் வைக்கின்ற கோரிக்கைகளை கனிவோடு பரிசீலனை செய்து, மக்கள் நலன் சார்ந்து அவர்களுடைய எண்ணம்போல் அவர்கள் வைக்கின்ற கோரிக்கைகளை நிறைவேற்றி வருகிறது என்பதற்கு இது ஒரு சான்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒரு கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் அதற்கு அழுத்தம் கொடுத்து, இது மக்கள் நலன் சார்ந்த திட்டம்தான், எனவே இதை உடனடியாக பரிசீலனை செய்யுங்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்றார்கள். அதன் அடிப்படையில்தான் பூமி பூஜை போடப்பட்ட இடத்தை நிறுத்திவைத்துவிட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் கூட்டணியில் இருக்கிறார் என்பது பற்றி கவலைப்படாமல், அவர் வைத்திருப்பது மக்கள் நலன் சார்ந்த கோரிக்கை என்பதால் முன்னுரிமை கொடுத்து, இன்றைக்கு ஒரு மாற்று இடத்தைத் தேர்வு செய்து, அதற்கான உத்தரவின் நகலுமே மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் நேரடியாக வழங்கப்பட்டிருக்கிறது. அவரும் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். கட்டடப் பணியை உடனடியாகத் தொடங்க வேண்டும் என்கின்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாவட்ட நிருவாகத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு நல்ல நாள் பார்த்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அனைவரையும் சேர்த்துவைத்து, அவர்கள் விரும்பிய இடத்திலேயே பணி தொடங்கப்படும். மாண்புமிகு

அம்மா அவர்கள் சொன்னதாக இங்கே சொன்னார்கள்; அதேபோல் மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் விரும்பிய இடத்திலேயே வட்டாட்சியர் அலுவலகத்திற்கான புதிய கட்டடம் அமையும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு என் வணக்கம்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண் 72—ல் வ.உ.சி. நகர், சாஸ்திரி நகர், அம்பேத்கர் நகர், சத்தியவாணி முத்து நகர், வார்டு எண் 73—ல் பென்ஷனர்ஸ் லேன், பாடிசபுரம் லேன், காந்தி நகர், 74—வது வார்டில், 75—வது வார்டில் பொன்னியம்மன் கோயில் தெரு, கரிமேடு 2—வது தெரு, எஸ்.எஸ்.புரம் 'A' பிளாக், எஸ்.எஸ்.புரம் 'B' பிளாக், நாராயணசாமி தெரு, வள்ளுவன் தெரு, பிரிக்ளின் சாலை, அதேபோல, 76—வது வட்டத்தில் கான்ரான்ஸ்மித் நகர் என்கின்ற சி.எஸ். நகர், கே.எம். கார்டன், கார்ப்பரேஷன் லேன் ஆகிய பகுதிகளில் பட்டா வழங்கப்பட வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களின் பல ஆண்டுக்கால கோரிக்கை. எனவே, அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையினை நிறைவேற்றும்வண்ணம் அப்பகுதியில் பட்டா வழங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்,*

2019 ஜூலை 16]

அவருடைய தொகுதியிலே உள்ள பகுதிகளின் நீண்ட பட்டியலை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே வசிக்கும் மக்களுக்குப் பட்டா தேவை என்று கேட்டுள்ளார்கள். பொதுவாகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது, வரன்முறைப்படுத்தி கொடுக்கக்கூடிய இடங்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால், அவை குடியிருப்பு ஆக்கிரமிப்புகளாக ஏற்கெனவே இருப்பதால் அரசு நிலங்களிலே அவர்கள் அந்த குடியிருப்புகளில் வசிக்கிறார்கள். அவர்கள் வசிக்கும் நிலம் எந்த வகைப்பாட்டிலே இருக்கிறது என்பதையும் பார்த்து, அவை ஆட்சேபகரமாக இல்லாத புறம்போக்காக இருந்தால் உடனடியாகப் பட்டா கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆட்சேபகரமான புறம்போக்கு நிலமாக இருந்தால், அதற்கென்று இரண்டு அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. நான் நேற்றே இதுகுறித்து இந்த அவையில் சொன்னேன். அதற்கு காலஅவகாசம் முடிந்துவிட்டதாலே, அந்தக் கால அவகாசத்தை நீட்டிப்பு செய்வதற்கான கோப்பு தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு அரசாணைகளுக்கு கால நீட்டிப்பு கிடைக்கப்பெற்றவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, அந்தப் பகுதியில் குடியிருப்பவர்களின் நிலங்களை வரன்முறைப்படுத்தி, தகுதியுள்ளவர்களுக்குத் தகுதியான நிலத்தை தேர்வு செய்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

119—

தொழிற்பேட்டை

***44511—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—